**இலங்கை திறந்த பல்கலைக்கழகம்**

**மானிடவியல் மற்றும் சமூக விஞ்ஞானங்கள் பீடம்**

**சட்டக்கற்கைகள் திணைக்களம்**

**சட்டமாணி பட்டப்படிப்பு நிகழ்ச்சித் திட்டம் - மட்டம் 4**

**இறுதிப்பரீட்சை – 2020/2021 (திறந்த புத்தகப் பரீட்சை)**

**LLU4707/LWU2313 – குடும்பச்சட்டம்**

**காலம் : 03 மணித்தியாலங்கள்**

---

திகதி : **03 செப்டெம்பர் 2021** நேரம்: **மு.ப 9.30 – பி.ப 12.30 வரை**

---

**தெளிவற்ற கையெழுத்துக்குப் புள்ளிகள் குறைக்கப்படும்**

**மொத்த வினாக்களின் எண்ணிக்கை - 06**

**நான்கு (04) வினாக்களிற்கு மாத்திரம் விடையளிக்கவும்**

| |
|---|
| உங்களால் தெரிவு செய்யப்பட்ட வினாக்களுக்குக்கான விடைகளை தீர்க்கப்பட்ட வழக்குகள் மற்றும் நியதிச்சட்ட ஏற்பாடுகள் என்பவற்றுடன் தொடர்புபடுத்தி ஆராய்வது முக்கியமானது என்பதனைத் தயவுசெய்து கவனத்தில் கொள்ளவும். |

1. சிவகுமார் மற்றும் திவானி ஆகிய இருவரும் 2012ம் ஆண்டு தமது திருமணத்தினைப் பொதுச்சட்டத்தின் கீழ் பதிவு செய்தனர். திருமணமாகிப் பல ஆண்டுகள் கழிந்த நிலையிலும் அவர்களால் குழந்தைகள் பெற்றுக்கொள்ள முடியவில்லையென்பதனால் அவர்கள் குழந்தையொன்றினை மகவேற்புச் செய்யவேண்டுமென சிவகுமார் பரிந்துரை செய்தான். இருப்பினும் திவானி அதனைச் செய்வற்கு விரும்பவில்லை. இருந்தபோதிலும், யாழ்ப்பாணத்திலுள்ள அவனது நண்பர்களில் ஒருவனான கோகுலனுக்குக் குழந்தையொன்றினை மகவேற்கும் அவனது எண்ணத்தினை சிவகுமார் தெரிவித்தான். பின்பு, விரான் என்னும் பெயருடைய 11வயது ஆண்பிள்ளையொன்று அவனது கிராமத்தில் இருப்பதாகவும் அவனைச் சிவகுமார் மகவேற்புச் செய்யமுடியுமெனவும் கோகுலன் சிவகுமாரிடம் தெரிவித்தான். விரானின் பெற்றோருக்கு மொத்தமாக ஆறு பிள்ளைகள் உள்ளனர் ஆனால் அவர்களைப் பராமாரிப்பதற்குப் போதிய வருமானமொன்று அவர்களிடம் இருக்கவில்லை. கோகுலனைச் சந்திப்பதற்காகச் சிவகுமார் யாழ்ப்பாணம் சென்றதுடன், அவனுடன் சேர்ந்து விரானின் வீட்டிற்குச் சென்றனர். விரானை மகவேற்புச் செய்வதற்காக விரானின் பெற்றோரிடம் அவர்கள் அனுமதி கோரினார்கள். சிவகுமார் மற்றும் அவனது குடும்பத்தினருடன் சிறப்பான வாழ்க்கையொன்றினை விரான் வாழக்கூடியதாகவிருக்கும் என எண்ணி, அக்கோரிக்கையை ஏற்றுக்கொண்டார்கள்.


(i) விரானை மகவேற்புச் செய்வதற்குச் சிவகுமாருக்குச் சட்டப்படி சாத்தியமாகுமா என ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ii) சிவகுமார் மற்றும் திவானி ஆகியோர் கனடாவில் வசிக்கின்றவொரு வெளிநாட்டுத் தம்பதியினர் என அனுமானிக்குக. அவர்கள் தற்போது இலங்கையில் அமுலிலுள்ள சட்டத்தின் கீழ் விரானை மகவேற்புச்செய்ய முடியுமா என ஆராய்க.

(10 புள்ளிகள்)

2. பின்வரும் வரைபடத்தினைப் பயன்படுத்தி இலங்கையின் பராமரிப்புக் கடப்பாடுகள் தொடர்பான சட்டத்தினை விளக்குக.




(25 புள்ளிகள்)

3. "திருமணமொன்று நிலைபேறாகவுள்ளபோது தனது பராயமடையாத பிள்ளையின் கட்டுக்காவல் தொடர்பாகத் தந்தையின் முன்னுரிமை எனும் பாரம்பரிய ரோமன் டச்சுக் கண்ணோட்டமானது அறுதியானதோ அல்லது சட்டத்தின் கட்டுப்பாடுகளிற்கு அப்பாற்பட்டதோ அல்ல என்பதுடன் குறித்த பிள்ளையின் உயிர், ஆரோக்கியம் மற்றும் ஒழுக்கம் என்பவற்றுக்கு ஆபத்து போன்ற விதிவிலக்கான சந்தர்ப்பங்களில் தலையிடமுடியும்"

*Jayarajan vs. Jayarajan (1999) 1 Sri L.R. 113*

கட்டுக்காவலில் தந்தைக்குள்ள முன்னுரிமை மற்றும் பிள்ளையின் மேலான நலன் என்பவை தொடர்பில் மேலுள்ள சட்டநிலைமையை ஆராய்க.

(25 புள்ளிகள்)

4.ராணி மற்றும் சமந்த ஆகிய இருவரும் 2010ம் ஆண்டில் திருமணம் முடித்தார்கள். திருமணத்திற்குப் பின்னர் சமந்தவின் பெற்றோர் வீட்டில் அவர்கள் வாழ்ந்தனர். சிறிது காலம் கழித்து, சமந்த தான் எதிர்பார்த்த தன்மையுடைய வாழ்கைத்துணையல்ல என ராணி புரிந்து கொண்டாள். சீதனம் தொடர்பாக ராணியிடம் சமந்தவின் பெற்றோரின் தொடர்ச்சியான விசாரணைகள், சமந்த குடிப்பழக்கத்திற்கு அடிமையாகியமை போன்ற காரணங்களால் சமந்த ராணியுடன் அடிக்கடி வாக்குவாதங்களில் ஈடுபட்டார், திருமண வாழ்கையானது ராணிக்கு கசப்பான அனுபவமாக மாறியது. அதேசமயம், சமந்த அதே ஊரினைச் சேர்ந்த மற்றொரு பெண்ணான நிமலினி என்பவளுடன் நெருக்கமான உறவில் இருப்பதாக வதந்திகள் வந்ததுடன், சமந்தவிடம் ராணி இது பற்றி விசாரித்தாள். சமந்த எந்த பதிலையும் அளிக்கவில்லை என்பதுடன் அவனுடன் ஒரே கூரையின் கீழ் அவளால் இனி வாழமுடியாது எனில் அவள் வீட்டைவிட்டு வெளியேற வேண்டுமெனக் கூறி அவளிடம் கடிந்துகொண்டான். எனினும் அவர்களுக்குக் குழந்தையொன்று பிறக்குமாயின் குடும்ப வாழ்கையானது சீர்பெறும் என்று எண்ணியவளாக ராணி தனது கடைமைகளைப் பொறுமையாக ஆற்றினாள். சுமந்தவிற்கும் நிமலிக்கும் இடையிலான உறவு பற்றிய வதந்திகள் உண்மையானவை என்பதையும் திருமணத்திற்கு முன்பிருந்தே அவர்கள் அந்த உறவினைக் கொண்டிருந்தார்கள் என்பதனையும் ராணி பின்னர் கண்டுபிடித்தாள். தொடர்ந்து ராணி தனது பெற்றோரின் வீட்டிற்குச் சென்றதுடன், அதன்பின்னர் சமந்த அவள்பற்றி எந்த விசாரணைகளும் செய்யவில்லை.

(i) ராணி குறித்த திருமணத்தினை முடிவுறுத்த விரும்புகின்றாள். ராணி தனது வழக்கில் வெற்றி பெற முடியுமா? ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ii) திருமண இல்லத்தினை விட்டு வெளியேறி 7 மாதங்களின் பின்னர் ராணி ஒரு குழந்தையைப் பெற்றெடுத்தாள் என அனுமானிக்குக. குறித்த குழந்தையின் தந்தைமையை சமந்த நிராகரிக்கின்றான். குழந்தையின் சட்டநெறிமுறைத் தன்மையை நிலைநாட்டும் ராணியின் இயலுமை குறித்த சட்டநிலைமையை ஆராய்க.

(10 புள்ளிகள்)

5. திருமணம் தொடர்பான சட்டங்களுக்கு இடையிலான முரண்பாடுகள் பற்றி நோக்குதல் மற்றும் திருமணம் தொடர்பான சீரான சட்டமொன்றினை வரைதலுக்கு உருவாக்கப்பட்ட குழுவொன்றின் உறுப்பினரொருவாராக உம்மைக் கருதவும். பின்வரும் விடயங்கள் தொடர்பான பிரச்சனைகள் மற்றும் முரண்பாடுகள் குறித்து அறிக்கையொன்றினைத் தயாரிக்கவும்.

- வலிதான திருமணத்திற்குரிய தேவைப்பாடுகள்
- திருமண முறிவு

(25 புள்ளிகள்)

6. கீழே தரப்பட்ட அட்டவணையில் குறிப்பிப்பட்டுள்ள தலைப்புக்களை உள்ளடக்கி இலங்கையில் சிறுவர்கள் உரிமைகளை விமர்சன ரீதியாக மதிப்பீடு செய்யும் அறிக்கையைத் தயாரிக்குக. உங்களது விமர்சனமானது ‘அ’ பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள இரு பரந்த பகுதிகளையும் ‘ஆ’ பகுதியில் குறிப்பிடப்பட்டுள்ள மூன்று பரந்த பகுதிகளையும் உள்ளடக்கியதாக இருக்கவேண்டும்.

| அ | ஆ |
|---|---|
| • கல்விக்கான உரிமை<br>• பாலியல் துன்புறுத்தல்கள் | • இலங்கையின் நியதிச்சட்டங்கள்<br>• நீதிமன்ற ஈடுபாடுகள்<br>• சர்வதேசச் சட்டம் |

(25 புள்ளிகள்)

***** பதிப்புரிமை பெற்றது *****